**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.4504/ஆ5/2024, நாள். 18.11.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவிப்பு எண். 110 இன்படி 2024–2025ஆம் ஆண்டிற்கான "இளம் கவிஞர் விருது" – கவிதைப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் – மாவட்ட அளவில் 22.11.2024 அன்று கவிதைப் போட்டிகள் நடத்துதல் – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்கள் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற கூட்டத் தொடர் அறிவுப்பு எண். 110, நாள். 07.09.2021
2. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048674/எம்1/இ1/2024, நாள். 07.11.2024

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடிதத்திற்கிணங்க மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கவிதைப் போட்டிகள் நடத்தி சிறந்த படைப்புகளை தெரிவு செய்து அந்த மாணவ, மாணவியர்களுக்கு "இளம் கவிஞர் விருது" மற்றும் பரிசுகள் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ம் வகுப்பில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கீழ்காணும் படி மாவட்ட அளவில் கவிதைப் போட்டிகள் நடைபெறும். மாவட்ட அளவில் நடைபெறும் இப்போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி 29.11.2024 (வெள்ளிக்கிழமை) அன்று சென்னை – 6, எழும்பூர், மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் மாநில அளவிலான கவிதைப் போட்டியில் பங்குபெறுதல் வேண்டும். மாநில அளவிலான போட்டியில் கலந்துக்கொண்டு வெற்றி பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு "இளம் கவிஞர் விருது" வழங்கி சிறப்பிக்கப்படுவர்.

**மாவட்ட அளவில் கவிதைப் போட்டி**
**நடைபெறும் இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்**
**நாள். 22.11.2024 (வெள்ளிக்கிழமை) நேரம் – காலை 9.30 மணி**

எனவே மேற்காண் நடைபெறும் மாவட்ட அளவிலான கவிதைப் போட்டியில் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு, 11 வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் ஒரு பொறுப்பாசிரியருடன் உரிய நேரத்தில் பங்கேற்க வேண்டும். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கவிதைப் போட்டிக்கான தலைப்புகளை மாணவ / மாணவியர்களுக்கு தெரிவித்து மாணாக்கர்கள் பங்கேற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – போட்டியின் தலைப்பு

ஒ.ம. 18.11.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை –6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்
   (போட்டிகள் நடைபெறுவதற்கு போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )

## இணைப்பு

### கவிதை தலைப்பு

1. ஆணும் பெண்ணும் நிகர் என்று கூறிய பாரதியின் தொலைநோக்கு பார்வை.
2. தமிழன் என்று சொல்லடா என்ற பாதியாரின் கூற்றிலிருந்து மாணவரின் பங்கு.
3. சட்டத்தின் பார்வையில் பெண்களின் பங்கு மற்றும் பாதுகாப்பு

ஏதேனும் மேற்கண்ட தலைப்பினை தெரிவு செய்து இக்கவிதைப் போட்டி குறைந்தது 40 வரிகள் கொண்டதாக இருக்க வேண்டும்.

**மொத்த மதிப்பெண்கள் – 20**

இவற்றில் பின்வரும் இனங்களுக்கு மொழிநடை – 10 மதிப்பெண்கள்

இலக்கண நயம் – 5 மதிப்பெண்கள்

கவிதைக்கான விளக்கம் அளித்தல் – 5 மதிப்பெண்கள்